பக்கங்கள் 16

# காலை முரசு

## இரத்தக் காயத்துடன் ஆணின் சடலம் மீட்பு!



தென்னிலங்கையில் இரத்தக் காயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

03

முழக்கம்: 02 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 06 வெள்ளிக்கிழமை 20.06.2025 அதிர்வு 320



# ராஜபக்ஷக்கள் போல் நாம் ஓடவும் மாட்டோம்; ஒளியவும் மாட்டோம்!

## அநுர அரசு தெரிவிப்பு

"ராஜபக்ஷக்கள் போல் நாம் ஆட்சியில் இருந்து ஒருபோதும் ஓடவும் மாட்டோம். போராட்டக்காரர்களுக்குப் பயந்து ஒளியவும் மாட்டோம். மக்கள் பக்கம் நின்று அவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதே எமது அரசின் பிரதான திட்டம்."

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

03

# அநுர அரசு எம்மை அடக்க நினைத்தால் பாரிய பின்விளைவுகளைச் சந்திக்கும்!

## மொட்டுக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் எம்.பி. எச்சரிக்கை



அநுர அரசு எம்மை அடக்க நினைத்தால் பாரிய பின்விளைவுகளைச் சந்திக்கும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம். பி. எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி வெளிப்படையான அரசியலையே முன்னெடுக்கின்றது. எமக்கு எந்தவொரு தரப்புடனும் 'டீல்' கிடையாது. நாம் தனிநபர்களுடன் பேச்சு நடத்தமாட்டோம். கட்சிகளுடன்தான்

03




இதுவரை காலமும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் மேலதிக சிரேஷ்ட சொலிஸிட்டர் ஜெனரல் பதவியில் இருந்த நளின் ரோஹித அபேசூரிய நேற்று நேரடியாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஏற்கனவே 17 மேல் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் பணியில் இருக்கிறார்கள். அவர்களில் ஆறு பேர் நான்கு வருடங்களுக்கு மேல் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களாக பணியில் இருப்பவர்கள். அவர்களை எல்லோரையும் தாண்டி, சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் ஒருவரை மேன்முறையீட்டு

02

# தமிழரசுக்குள் இருக்கும் கறுப்பாடுகள் கண்டுபிடிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை

## கட்சியின் தலைவர் சி.வி.கே. பகிரங்க எச்சரிக்கை

(பிரபாகரன் டிலக்சன்)

உள்ளூராட்சி சபைகளில் தலைமைப் பதவிக் கான இரகசிய வாக்கெடுப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தீர்மானத்துக்கு எதிராகச் செயற்படும் கறுப்பாடுகள் கண்டுபிடிக்கப் பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்தக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் மேலும் கூறுகையில்,

“வலிகாமம் வடக்கு பிரதேச சபைக் கான தவிசாளர் தெரிவில் பல சதிகளுக்கு மத்தியில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வெற்றி கிடைத்திருக்கின்றது. குறிப்பாக எங்கள் கட்சியினுடைய உறுப்பினர் ஒருவரே கட்சியினுடைய தீர்மானத்துக்கு மாறாகக் கட்சியின் தவிசாளர் வேட்பாளரை ஆதரிக்காமல் நடுநிலைமை வகித்தமை ஏமாற்றத்துக்குரியது.



அவரை உடனடியாகக் கட்சியில் இருந்து இடைநிறுத்துவதற்கான பணிப்புரையைக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரனுக்கு விடுத்திருந்தேன். அதற்கமைய அந்த உறுப்பினர் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

வேறு சபைகளிலும் இரகசிய வாக்கெடுப்பு மூலம் எங்களைத் தோற்கடித்தவர்கள் யார் என எங்களுக்குத் தெரியும். ஆனால், அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது. ஆனால், பகிரங்க வாக்கெடுப்பில் கட்சியின் தீர்மானத்தை மீறி இருக்கின்றமை தவறான விடயமாகும்.

மேலும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தெரிவிலும் சதி நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனை நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் நடுநிலைமை வகித்த உறுப்பினருக்கு எவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதோ அதேபோல் இரகசிய வாக்கெடுப்பில் தமிழரசுக் கட்சியின் தீர்மானத்துக்கு எதிராகச் செயற்படும் கறுப்பாடுகள் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராகவும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.” – என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தின் தலைமை நீதியரசராக ஜனாதிபதி நியமனம் செய்திருக்கிறார். அதற்கு அரசு தரப்பின் 'பிடி' அதிகம் இல்லாத அரசமைப்புக் கவுன்ஸிலும் அங்கீகாரம் வழங்கியிருக்கிறது.

ஏற்கனவே மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசராக இருந்த நிஸங்க பந்துல கருணாரத்ன பல்வேறு நீதி முரண்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான சர்ச்சைகளுக்குள் சிக்கி இருந்தார். புதிய அரசு பதவிக்கு வந்ததும் அவரது நடவடிக்கைகள் தொடர்பில் அவருக்கு எதிராக குற்ற விசாரணை பிரேரணை கொண்டு வரப்பட இருப்பதாக அரசு தரப்பில் அவிழ்த்து விடப்பட்ட மிரட்டல் செய்தியை அடுத்து, அவர் கடந்த ஜனவரி மாதத்தோடு முற்கூட்டியே விடுமுறை ஓய்வில் சென்று விட்டார். உண்மையில் அவரது பதவிக்காலம் இந்த மாதம் வரை இருந்தது. ஆனாலும் நெருக்கடி நிலைமையை முன்னிட்டு அவர் தாமாகவே ஓய்வுக்கு முன்னான விடுமுறையில் சென்றார்.

அவர் சட்ட ரீதியாக ஓய்வு பெறாத காரணத்தினால், அந்த ஓய்வு நாள் வரை அவரது இடத்துக்கு மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைமை நீதியரசராக ஒருவர் நியமிக்கப்பட்டார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் வரிசையில் அடுத்த சிரேஷ்ட நிலையில் இருந்த நீதியரசர் எம்.ரி.முஹம்மட் லவ்வார் பெப்ரவரி முதல் அந்தப் பதவியில் இருந்தாராயினும், அவரும் பல்வேறு முறைகேடுகள் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகி இருந்தார். குறிப்பாக வழக்கு விசாரணைகளுக்கான நீதியரசர் ஆயங்களை வேண்டுமென்று திட்டமிட்டு ஒழுங்குபடுத்தினார் (Bench Fixing) என்ற குற்றச்சாட்டு உட்பட பல விடயங்கள் அவருக்கு எதிராகப் பேசப்பட்டு வந்தன.

உயர்நீதிமன்ற நீதியரசர்களுக்கான பதவி உயர்வு வந்த போது அவரைப் பரிந்துரைக்க தற்போதைய பிரதம நீதியரசர் அடியோடு மறுத்துவிட்டார் எனத் தெரிகிறது.

அதனால் அவரது பெயரை உயர் நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்காத நிலையில் அவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது.

ஆயினும் கடைசியாக இரண்டொரு தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற அரசமைப்புக் கவுன்ஸில் கூட்டத்தில் சிறிய கட்சிகளின் பிரதிநிதியாக கவுன்ஸிலுக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் சிறிதரன் நீதியரசர் லவ்வாருக்கு உயர் நீதிமன்ற நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று தனி ஒருவராக கூட்டத்தில் ஒற்றைக் காலில் நின்று வலியுறுத்தினார் எனத் தெரிய வருகிறது.

ஏற்கனவே நியமனங்கள் தொடர்பான விடயங்கள் எல்லாம் பேசி முடிந்த நிலையில் கூட்டத்திற்குத் தாமதமாக வந்த சிறிதரன், தமிழில் நீதியரசர் லவ்வாருக்காகக் குரல் எழுப்பிப் பேசினார் என உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

லவ்வாரின் பெயரை ஜனாதிபதி பரிந்துரைக்கவேயில்லை, அத்தோடு அவரை உயர்நீதிமன்ற நீதியரசர் பதவிக்கு பரிந்துரைக்க முடியாது என பிரதம நீதியரசர் எழுத்தில் தெரிவித்து விட்டார் என்ற தகவல்களை அரசமைப்பு கவுன்ஸில் கூட்டத்தில் தெரிவித்த பிரதமர் ஹரிணி அமரசூரிய அதனால் லவ்வாரைப் பற்றி இங்கு பேசுவதில் அர்த்தம் இல்லை என்று கூறி சிறிதரனின் வாயை அடக்கினார் எனத் தெரிய வந்தது.

நீதித்துறையில் அதுவும் நீதியரசர் பதவிகளில் சர்ச்சைக்குரியவராக பல தரப்பினாலும் பேசப்படும் லவ்வாரை சிறுபான்மை இனத்தவர் என்று ஒரு காரணத்தை மட்டும் முன்னிறுத்தி சிறிதரன் எம்.பி. அவருக்காகத் தனித்து அளவுக்கு அதிகமாகக் குரல் எழுப்பியமை குறித்து அரசமைப்பு கவுன்ஸில் உறுப்பினர்கள் மட்டத்தில் கடும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டதாக அறிய வந்தது.

மேல் நீதிமன்ற நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்ற இளஞ்செழியனுக்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் பதவி உயர்வு வழங்கப்படவில்லை என்பதையும் இந்த அரசமைப்புக் கவுன்ஸில் கூட்டத்தில் சிறிதரன் குறையாக எடுத்துப் பேசினார் என்றும் தெரிய வந்தது.

ஏதேனும் உரிய பதவிகளுக்கு ஜனாதிபதியினால் கவுன்ஸிலுக்குப் பரிந்துரைக்கப்படும் பெயர்கள் குறித்து பரிசீலித்து, அவற்றை ஏற்று அங்கீகரிப்பதா, அல்லது மறுத்து நிராகரிப்பதா என்பதை மட்டுமே அரசமைப்புக் கவுன்ஸில் முடிவெடுக்க முடியும், பரிந்துரைக்கு வராத ஒரு நபரை நியமிக்கும்படி கவுன்ஸிலில் பேசுவது அர்த்தமற்றது, அது அரசமைப்புக் கவுன்ஸிலின் பணியோ பொறுப்போ அல்ல என்று கவுன்ஸில் உறுப்பினர் ஒருவர் பின்னர் சுட்டிக் காட்டினார்.

நியமனங்களுக்கான பரிந்துரைகளை வழங்குவது தனித்து ஜனாதிபதியின் தற்றுணிபு அதிகாரத்துக்கு உட்பட்டது. இன்னாரைப் பரிந்துரையுங்கள் என்று ஜனாதிபதியை அரசமைப்புக் கவுன்ஸிலோ, அதன் உறுப்பினர்களோ அல்லது வேறு யாரோ வற்புறுத்தவோ, அழுத்தம் கொடுக்கவோ முடியாது. அத்தகைய உயர் பதவிகளுக்கு அவர் பரிந்துரைக்கும் பெயர்களை அங்கீகரிப்பதா, இல்லையா என்பதை மட்டுமே அரசமைப்புக் கவுன்ஸில் தீர்மானித்துக் கூறமுடியும் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

லவ்வாரையோ, இளஞ்செழியனையோ அடுத்த பதவி நிலைக்குப் பரிந்துரைக்கவில்லை என்பது குறை என்றால், அதை ஜனாதிபதியிடம்தான் பேச வேண்டும். அவர் பதவிக்குப் பரிந்துரைக்காத விடயம் குறித்து அரசமைப்புக் கவுன்ஸிலில் குரல் எழுப்பி அர்த்தமில்லை. அது பொதுக் கருத்துப் பரிமாறும் நாடாளுமன்றம் கூட அல்ல.

# மயங்கி விழுந்த தாய் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(எஸ்.ரகுதீஸ்)

யாழ்ப்பாணம், களபூமி காரைநகர் பகுதியில் மயங்கி விழுந்த மூன்று பிள்ளைகளின் தாயார் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த கேதீஸ்வரன் சுசிலா (வயது 50) என்ற மூன்று பிள்ளைகளின் தாயாராவார்.

நேற்று வியாழக்கிழமை நண்பகல் கோவிலுக்கு புறப்பட ஆயத்தமான போது அவர் மயங்கி விழுந்தார். உடன டியாக காரைநகர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப் பட்ட நிலையில் பிற்பகல் உயிரிழந்தார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற் கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சாட்சிகளை ஊர்காவல் துறை பொலிஸார் நெறிப்படுத்தி னர்.

---

## ராஜபக்ஷக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறுகையில்,

"ஈரான் – இஸ்ரேல் மோதல் பல நாடு களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும், இலங்கையில் எரிபொருள் உட்பட பல பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்றும், இலங்கை மீண்டும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளப் போகின் றது என்றும் ஒரு தரப்பினர் சமூக ஊடகங்களில் விஷமத்தனமான கருத் துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

அதுமட்டுமல்லாமல் உலக நாடுகளுக் கிடையிலான போரால் உருவாகப் போகும் பொருளாதார நெருக்கடியால் அநுர அரசும் ராஜபக்ஷ அரசு போல் மக்களைக் கைவிட்டுவிடும் என்றும், மக்கள் வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலைமை ஏற்படும் சமூக ஊடகங்களில் குறித்த தரப்பினர் மக்களைக் குழப்பும் வகையில் கருத்துக்களைக் கூறி வருகின்றனர்.

இந்த முட்டாள்களின் கருத்துக்களை நாட்டு மக்கள் நம்பமாட்டார்கள். நாம் எப்போதும் மக்கள் பக்கமே நிற்போம்.

கடந்த ஆட்சியில் நாட்டில் பொரு ளாதார நெருக்கடி ஏற்பட உலக நாடுக ளுக்கிடையிலான போர் காரணம் அல்ல. ராஜபக்ஷக்களின் ஊழல், மோசடிகளே அந்த நிலைமைக்குக் காரணம்.

அதேவேளை, தற்போது ஈரான் – இஸ்ரேல் மோதலால் எமது நாட்டுக்கு எந்த வழியிலும் பாதிப்பு ஏற்படாது. எனினும், அந்த நாட்டில் சிக்கியுள்ள இலங்கையர்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்துள்ளோம்."

– என்றார்.

## அநுர அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமக்குக் கொடுக்கல், வாங்கல் உள்ளது.

அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகளை ஒடுக்கி தமது அரசியல் பயணத்தை முன்னெடுக்க அநுர அரசு முற்படுமானால் அதற்கு முகங்கொடுப் பதற்கு நாம் தயார். இந்நாட்டில் எமது அரசியல் பயணம் தொடரும்.

ஐக்கிய தேசியக் கட்சியால் அடக்கு முறைக்கு உள்ளான கட்சிதான் ஜே.வி. பி. எனவே, அடக்குமுறையின் தாக்கம், அதனால் ஏற்படும் பாரிய பின்விளைவுகள் என்னவென்பன பற்றி தற்போதைய அரசுக்கு நன்கு தெரியும்." – என்றார்.

## இரத்தக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலி – கொழும்பு பிரதான வீதியில் மொரகல்ல பிரதேசத்தில் இருந்து இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று அளுத் கமை பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்க வில்லை என்றும் பொலிஸார் குறிப் பிட்டனர். 5 அடி 5 அங்குலம் உயரமுடைய நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணை களை அளுத்கமை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

---

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை சிவலோகசுந்தரம்



நெல்லியடி, யார்வத்தை வதிரி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், மிருசுவில் வடக்கு குருக்கள் மாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிவலோகசுந்தரம் 19.06.2025 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார் .

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை – மீனாட்சிப் பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் – கற்பகம் ஆகியோரின் பாசமிகு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சாரதாதேவி, இந்திராணி, சாம்பசிவம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சிவகௌரி, சிவகுமார் (இலங்கை மின்சார சபை – சுன்னாகம்), திருச்செந்தூரன் (சிரேஷ்ட விரிவுரையாளர், அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார். அன்னார் சுதாகரன் (பல நோக்கு கூட்டுறவு சங்கம், பளை), மயூரிகா (குடும்ப நல உத்தியோகத்தர் கரவெட்டி), சிந்துஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச சபை, கரவெட்டி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கம்சாயினி, சங்கீத், சஞ்சய், ஹர்னிகன், றக்சினி, அஸ்விகா, அக்ஷயன், அக்ஷனா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் மிருசுவில் வடக்கு குருக்கள் மாவடியில் உள்ள அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பிற்பகல் இரண்டு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மிருசுவில் வடக்கு பெரியானோடை இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:
**சி. சிவகுமார் (மகன்) -0772269891**
**சி. திருச்செந்தூரன்( மகன்) -0779496977**
**சிவகௌரி( மகள்) -0771486988**

தகவல்:
**குடும்பத்தினர்.**



# வடக்கு ஆளுநரை நேற்று சந்தித்த கரைச்சி பிரதேச சபை தவிசாளர்

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை, கிளிநொச்சி – கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேளமாலிகிதன் தலைமையில் பிரதேச சபையின் உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் நேற்று வியாழக்கிழமை ஆளுநர் செயலகத்தில் சம்பிரதாய பூர்வமாக சந்தித்துக் கலந்துரையாடினர்.

கரைச்சிப் பிரதேச சபையின் ஆளணிகளின் தேவைப்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆளுனருடன் அவர்கள் கலந்துரையாடியதுடன் அது தொடர்பான மனுவையும் ஆளுநரிடம் கையளித்தனர்.





நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அதிக சீனி ஆபத்தானது

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும் என்பார்கள். உணவு விடயத்தில் இது பெரும்பாலும் முற்றிலும் சரியாகும்.

அதிகம் சர்க்கரை அல்லது சீனி சத்து எடுப்பது நீரிழிவு நோயைத் தருமா என்ற கேள்வி இருந்தாலும், சுகதேகிகள் கூட அளவுக்கு அதிகமாகச் சீனி சத்தை - சர்க்கரையை - எடுக்காமல் தவிர்த்துக் கொள்வது நல்லது என்பதுதான் வைத்தியர்களின் பொதுவான ஆலோசனை.

ஆயினும் சிறுபராயத்தவர்கள் அவர்களுக்கு தேவையான அளவு சீனிச் சத்தை - மாப்பொருளை - உண்ண வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

ஆனால், சிறார்கள் மத்தியில் வெல்ல உணவுகளை உட்கொள்ளும் அளவு எல்லை மீறி அதிகமாகி வருவதாக ஓர் ஆய்வில் கண்டறியப்பட்டிருக்கிறது.

பாலர் பள்ளிக் குழந்தைகளிடையே சீனி வகை உணவின் நுகர்வு மிக அதிகமாக இருப்பதாகவும், பரிந்துரைக்கப்பட்ட அளவை விட நான்கு மடங்கு அதிகமாக அது இருக்கலாம் என்றும் சுகாதார அமைச்சகம் எச்சரித்துள்ளது. இந்த உணவுகளில் கேக் மற்றும் பிஸ்கட் ஆகியவை அதிகம் அடங்கும்.

சமூக மற்றும் நடத்தை மாற்றங்கள் மூலம் குழந்தைகளின் சுகாதார மேம்பாட்டிற்கான பொது விழிப்புணர்வு தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது, அமைச்சின் சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் சமூக மருத்துவ நிபுணர் டாக்டர் இனோகா விக்ரமசிங்க இந்தக் கவலைகளை தெரிவித்திருக்கின்றார்.

பாலர் பள்ளிக் குழந்தைகளில் சுமார் 60 வீதம் பேர் குளிர்பானங்கள் என்றும் அழைக்கப்படும் 'ஃபிஸி' பானங்களை உட்கொள்கிறார்கள். இதில் அதிக அளவு சர்க்கரை உள்ளது என்று அவர் வலியுறுத்தினார். பெரும்பாலான சந்தர்ப்பங்களில், பாலர் பள்ளிகளிலிருந்து திரும்பும் வழியில் பாலர் பள்ளிக் குழந்தைகள் இந்த பானங்களை உட்கொள்கிறார்கள் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டிருக்கின்றார்.

குளிர்பானங்கள் அல்லது சோடாக்கள் என்றும் அழைக்கப்படும் ஃபிஸி பானங்கள், பொதுவாககார்பனேற்றப்பட்ட மது அல்லாத பானங்கள் ஆகும். அவை பொதுவாக சர்க்கரை அல்லது செயற்கை இனிப்புகள் போன்ற சுவையூட்டிகள் சேர்க்கப்பட்டவை. அவற்றுடன் பல்வேறு சுவைகள், வண்ணங்கள் மற்றும் பாதுகாப்புப்பொருள்களையும் சேர்க்கின்றனர். சில எடுத்துக்காட்டுகளில் கோகோ கோலா, பெப்சி, ஃபாண்டா, ஸ்ப்ரைட் மற்றும் டாக்டர் பெப்பர் ஆகியவை இவற்றில் அடங்கும்.

"நாம் ஒரு நாளைக்கு உட்கொள்ள வேண்டிய பரிந்துரைக்கப்பட்ட அளவு காய்கறிகள், பழங்கள் மற்றும் பச்சை இலைகள் உள்ளன. அதாவது இரண்டு காய்கறிகள், இரண்டு பழங்கள் மற்றும் ஒரு பச்சை இலை. இருப்பினும், குருநாகல் மாவட்டத்தில் நடத்தப்பட்ட ஒரு கணக்கெடுப்பில் சுமார் 18.2 வீதக் குழந்தைகள் மட்டுமே இந்த அளவுகளை உட்கொள்கிறார்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது.'' - எனவும் சமூக மருத்துவ நிபுணர் டாக்டர் இனோகா விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

சிறு பராயத்தவர்களே சர்க்கரை நோய்க்கு ஆளாகும் சந்தர்ப்பங்கள் பற்றிய - அதிர்ச்சிகரமான - ஆச்சரியமான - செய்திகளை நாம் அடிக்கடி கேள்விப்படும், சூழலில் சிறு பிள்ளைகளுக்கு அதிக அளவில் சீனிப் பொருள்களை ஊட்டுவது குறித்துப் பெற்றோர்கள் கவனம் எடுக்க வேண்டும். உரிய மருத்துவ ஆலோசனைகள் இன்றி இந்த விடயங்களில் தான் தோன்றித்தனமாக நடப்பதை பெற்றோர்கள் தவிர்த்துக் கொள்வது நல்லது.



# வடக்கு ஆளுநர் - வவுனியா மேயர் சந்திப்பு

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை, வவுனியா மாநகர சபையின் மேயர் சு.காண்டீபன் நேற்று வியாழக்கிழமை ஆளுநர் செயலகத்தில் சம்பிரதாயபூர்வமாகச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

வவுனியா மாநகர சபை புதிதாக உருவாக்கப்பட்டுள்ள நிலையில் அதன் தேவைப்பாடுகள் தொடர்பில் ஆளுநரிடம் கோரிக்கைகளை மேயர் முன்வைத்தார்.

ஆளணிகளின் அவசிய தேவை தொடர்பிலும் ஆளுநரிடம் அவர் கோரிக்கை விடுத்தார்.

வவுனியா மாநகருக்கான முதன்மைத் திட்டத்தை தயாரிக்குமாறு மேயரிடம் ஆளுநர் கோரினார்.



# 160 போதை மாத்திரைகளுடன் யாழில் இளைஞர் ஒருவர் கைது

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் 160 போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் நேற்று வியாழக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் போதைக் குற்றத் தடுப்புக்குப் பொறுப்பாகவுள்ள பொ.பா.விஜயராஜா தலைமையிலான பொலிஸ் குழுவினரால் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மானிப்பாய், சுதுமலை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டார்.

கைதான சந்தேகநபரை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.





# குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக்கோவையின் திருத்தச் சட்டமூலத்தில் சபாநாயகர் கையொப்பம்

குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் திருத்தச் சட்டமூலத்தில் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார்.

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை சட்டத்தைத் திருத்துவதற்கான இச்சட்டமூலம் கடந்த ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி முதலாவது மதிப்பீட்டுக்காக நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் கடந்த மே மாதம் 23 ஆம் திகதி இடம்பெற்றதுடன் கடந்த 4 ஆம் திகதி மூன்றாவது மதிப்பீட்டையடுத்து இச்சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதற்கமைய இந்தச் சட்டமூலம் 2025 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்த) சட்டமாக அமுலுக்கு வருகின்றது.

சந்தேக நபர்களும் பிரதிவாதிகளும் நீதிமன்றங்களில் நேரில் ஆஜராகாமல், தொலைதூரத்திலிருந்தே விசாரணைகளில் பங்கேற்க அனுமதிப்பதன் மூலம் நீதிமன்ற செயல்பாடுகளை நவீனமயமாக்குதல் 2025 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்த) சட்டத்தின் நோக்கமாகும்.

நீதவான் மற்றும் மேல் நீதிமன்ற நீதிபதிகளின் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள், பொது சுகாதார அவசரநிலைகள் அல்லது தனிமைப்படுத்தல் போன்ற சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட தனிநபர்கள் நேரில் முன்னிலையாவதிலிருந்து விடுவிக்க முடியும்.

அவ்வாறான சந்தர்ப்பங்களில், சம்பந்தப்பட்ட நபர் சட்டத்தரணி ஒருவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், நேரடியாக காணொளி அல்லது ஒலிப்பதிவு ஊடகங்கள் மூலம் இணைந்துகொள்ள முடியும்.

இந்தச் சட்டம் மூலம் சாட்சியாளர்களுக்கு எந்தவொரு இடத்திலிருந்தும் தொலைதூரத்திலிருந்து சாட்சியமளிப்பதற்கு இடமளிக்கிறது.

எனினும், முதலாவது நீதிமன்ற வருகை, சித்திரவதை அல்லது மனித உரிமை மீறல்கள் தொடர்பான வாக்குமூலங்கள் அல்லது உளநலப் பிரச்சினைகளுக்குத் தனிநபர்கள் நேரில் முன்னிலையாக வேண்டும்.

இந்தச் சட்டமூலத்தில் ஆணையாளர்களை நியமித்தல், இனங் காண்பதை உறுதிப்படுத்தல் மற்றும் இலத்திரனியல் ஆவணங்கள் உள்ளிட்ட செலவுகளைக் கையாளுதல் தொலைதூர விசாரணைகளுக்கு நடவடிக்கை முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தச் சட்டமூலம் சட்டப் பாதுகாப்புகளைப் பேணும் அதே வேளையில் நீதித்துறை அமைப்பை டிஜிட்டல் மயமாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# ஈரானிலிருந்து இலங்கையர்களை வெளியேற்ற இந்தியாவில் உதவி கோருகின்றது அரசாங்கம்

ஈரான் – இஸ்ரேல் இடையில் அதிகரித்து வரும் பதற்றமான சூழ்நிலையை கருத்தில் கொண்டு, ஈரானில் உள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இலங்கை அரசு தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

இதன் ஒரு கட்டமாக, இலங்கை வெளியுறவு அமைச்சகம், கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம் மூலம் இந்திய வெளியுறவு அமைச்சகத்தை தொடர்பு கொண்டு, ஈரானிலிருந்து இலங்கையர்களை வெளியேற்றுவதற்கான உதவியைக் கோரியுள்ளது.

இந்த நிலையில், எல்லைகளில் சாத்தியமான இடங்களை இலங்கையர்கள் அடைய முடிந்தால், அவர்களுக்கு உதவியளிக்க இந்தியா ஒப்புக் கொண்டதாக கூறப்படுகிறது.



இதற்கிடையில், 110 இந்திய மாணவர்களைக் கொண்ட முதல் குழு வடக்கு ஈரானிலிருந்து வெளியேற்றப்பட்டு கடந்த ஜூன் 17 ஆம் திகதி எல்லையைத் தாண்டி ஆர்மீனியாவுக்குள் சென்றது.

பின்னர் நேற்று அதிகாலையில் அங்கிருந்து புதுடில்லிக்கு விமானம் மூலம் அந்த குழு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# மத்திய நிலையங்களில் பராமரிக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களால் நடத்தப்படும் 356 சிறுவர் அபிவிருத்தி மத்திய நிலையங்களில் பராமரிக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை 9,190 வரை அதிகரித்துள்ளது.

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள தரவுகளில் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு இம்முறை வரவு செலவுத்திட்டத்தில் நிறுவனப் பராமரிப்பிலுள்ள சிறுவர்கள் மற்றும் தெருவோரக் குழந்தைகளுக்காக 5,000 ரூபா உதவித்தொகை வழங்குவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.








# இலங்கை நாடாளுமன்ற அமர்வை பார்வையிட்ட நடிகர் மோகன்லால்

இலங்கைக்கு வருகை தந்துள்ள பிரபல நடிகர் மோகன்லால் உள்ளிட்ட குழுவினர் நேற்று நாடாளுமன்ற சபை அமர்வை பார்வையிட்டனர்.

நடிகர் மோகன்லால் உள்ளிட்ட குழுவினரை பிரதி சபாநாயகர் வரவேற்றார்.

இலங்கைக்கு படப்பிடிப்பொன்றிற்காக வருகை தந்த அவர் நேற்று நாடாளுமன்றத்திற்கு சென்றார்.



பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலியின் அழைப்பிற்கு அமைய வருகை தந்த மோகன்லால் உள்ளிட்ட குழுவினர் சபாநாயகரின் கலரியில் இருந்து நாடாளுமன்ற அமர்வை பார்வையிட்டனர்.

இந்த விஜயத்தின் போது, அவர் பிரதமர் ஹரிணி அமரசூரிய, சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன மற்றும் பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி ஆகியோரை சந்தித்துக் கலந்துரையாடினார்.

நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் இதன்போது கலந்துகொண்டார்.










# பாதுகாப்பு ஆலோசனைக் குழு கூட்டத்தில் ஜனாதிபதியிடம் கிழக்குக் காணிகள் விடுவிக்குமாறு சாணக்கியன் கோரிக்கை



பாதுகாப்பு அலுவல்கள் அமைச்சு சார் ஆலோசனைக் குழு பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையில் கடந்த செவ்வாயன்று நாடாளுமன்றத்தில் கூடிய போது இராணுவம் கையகப்படுத்தியுள்ள தமிழ் மக்களின் காணிகளின் விடுவிப்பு தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம். பியான சாணக்கியன் இராசமாணிக்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கைகளை முன்வைத்தார்.

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை நிறுத்த கடற்படையின் உதவியைப் பெறுதல், வடக்கு மற்றும் கிழக்கில் காணிகளை விடுவிப்பது தொடர்பான பிரச்சினைகள் போன்ற பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்புடைய பல்வேறு பிரச்சினைகளை நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

அதன்படி, நியாயமான கோரிக்கைகளை பரிசீலித்து உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளுக்குத் தேவையான அறிவுறுத்தல்களை ஜனாதிபதி வழங்கினார்.

சாணக்கியனால் இந்தக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் வருமாறு:-.

கிழக்கு மாகாண காணிகளை விடுவித்தல் தொடர்பாக –

மட்டக்களப்பு மாவட்டத்தின் காயன்கேணி பிரதேசத்தில் உள்ள பாடசாலைக்கு அருகில் இராணுவத்தினர் ஓய்வு விடுதி ஒன்றை நிர்மாணித்துள்ளது. இது தொடர்பில் நாம் வினாவிய போது, அந்த ஓய்வு விடுதியை அகற்ற முடியாது என இராணுவம் அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் முறக்கொட்டாஞ்சேனையில் உள்ள பாடசாலை, பாலயடிவத்தை பிரதேசத்தில் உள்ள வர்த்தக சந்தை, குருக்கள் மடம் பகுதியில் உள்ள பாடசாலை இன்றளவிலும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் காணப்படுகின்றன.

தாண்டியடி விசேட அதிரடிப்படை முகாம் மயானம் அமையப்பெற்றுள்ள காணியிலும், களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையம் தனியாருக்கு சொந்தமான காணியிலும் அமையப் பெற்றுள்ளன.

வாகரை பிரதேசத்தில் கடற்படையினரினால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளின்அளவு எவ்வளவு என்பது தொடர்பாகவும், அதில் எவ்வளவு காணி பயன்படுத்தப்படுகின்றது என்பது தொடர்பாகவும் சரியான புருதல் இல்லை என்பதுடன், வாகரை பிரதேசத்தில் அதிகளவான காணிகள் கடல்படையினருக்கு சொந்தமாக காணப்படுவதால், அந்தக் காணிகளை விடுவிக்க வேண்டும்.

இந்தக் காணிகள் தொடர்பான விடயங்கள் விருவாக ஆராயப்பட வேண்டும் என்பதால் இது தொடர்பான விசேட குழுவொன்றை நியமிக்குமாறு சாணக்கியன் கோரினார்.

ஆலையடிபிரதேசத்தில்நெல்சந்தைப் படுத்தல் சபையும் இராணுவ முகாமிற்குள் காணப்படுவதுடன், இராணுவ முகாமிற்குள் அமைந்துள்ள சில பாடசாலைகளுக்கு பதிலாக மாற்றுப் பாடசாலைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள போதிலும் அவை கிராமத்திற்கு வெளியில் அமைந்துள்ள காரணத்தினால் பல சிக்கல்களை மாணவர்கள் மற்றும் ஊர் மக்கள் சந்திக்கின்றனர். – என்று சாணக்கியன் தெரிவித்தார்.

அனைத்து இராணுவ முகாம்களும் அமமந்துள்ள காணிகள் குறித்து மீளப் பரிசீலனை செய்து அறிக்கை ஒன்றினை வழங்குமாறு அறிவித்துள்ளதாகவும், அந்த அறிக்கை கிடைத்தவுடன் அதன் அடிப்படையில் மீண்டும் கலந்துரையாடல் நடாத்தப்படும் எனவும் சபையில் தவிசாளர் தெரிவித்தார்.

















# மாநகர சந்தைக் கடைத்தொகுதிகளுக்கு முதல்வர் மதிவதனி நேற்றுக் களவிஜயம்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் சந்தைக் கட்டடத் தொகுதிகளின் பிரச்சினைகளை ஆராயும் வகையில் முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராசா நேற்று கள விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.



அந்த வகையில் மாநகரசபையின் பாசையூர் மற்றும் சின்னக்கடை சந்தைக் கடைத் தொகுதிகளுக்குச் சென்று அங்கு வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் தொழிலாளர்களிடம் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் குறைபாடுகளை கேட்டு அறிந்து கொண்டார்.

முதல்வரின் வருகையை உணர்ந்து கொண்ட சந்தை வாடிக்கையாளர்கள் மற்றும் பொது மக்கள் சந்தைத் தொகுதியில் உள்ள சுகாதார குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினர். சந்தைகளின் சுகாதார குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முதல்வர் மதிவதனி, சுகாதாரம் மற்றும் பொதுச் சுகாதார பொறியியற் பிரிவிற்கு ஒருவாரம் கால அவகாசம் வழங்கி உடன் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.

யாழ் மாநகர பிரதி முதல்வர், மாநகரசபை உறுப்பினர்கள், பிரதம பொறியியலாளர், பிரதம வருமானவரி பரிசோதகர், சுகாதார பிரதம மேற்பார்வையாளர், சுகாதார மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழில் நுட்ப உத்தியோகத்தர் எனப் பலரும் இதன் போது இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாநகரசபையின் ஏனைய சந்தைத் தொகுதிகள் மற்றும் நகர்ப்புற வர்த்தக நிலையங்களுக்கும் முதல்வர் நேரில் சென்று குறைபாடுகளை ஆராய்ந்து விரைவில் அவற்றைச் சீர்செய்ய திட்டமிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.





# இந்தியா – பாக். போரை நிறுத்தியது யார்? பிரதமர் மோடியை சாடுகிறார் ப.சிதம்பரம்



இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையிலான போரை நிறுத்தியது யார் என முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் எக்ஸ் தளத்தில் வினவியுள்ளார்.

இந்தியா – பாகிஸ்தான் இடையேயான போர் நிறுத்த விவகாரத்தில் அமெரிக்க நாடு எந்தப் பங்கும் வகிக்கவில்லை என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பிடம் பிரதமர் மோடி அண்மையில் தொலைபேசி உரையாடலில் தெளிவுபடுத்தி இருந்தார். இதன் பின்னர் ‘போரை நிறுத்தியது நான்தான்’ என ட்ரம்ப் கூறி இருந்தார்.

இந்நிலையில், இது தொடர்பாக காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ப.சிதம்பரம் எக்ஸ் தளத்தில் ட்வீட் செய்துள்ளார். அந்த பதிவில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,


“போரை நிறுத்தியது யார் என்ற கதை இப்போது சுவாரஸ்ய கட்டத்தை எட்டியுள்ளது. ‘இந்தியா – பாகிஸ்தான் இடையே மத்தியஸ்தம் செய்து போரை நிறுத்தியதாக’ ட்ரம்ப் தெரிவித்து 39 நாள்கள் ஆகிறது. இதன் பிறகே ‘இந்தியா மத்தியஸ்த்தை ஏற்காது’ என ட்ரம்ப் உடனான தொலைபேசி உரையாடலில் பிரதமர் மோடி சொல்லியுள்ளார்.

இந்தியா – பாகிஸ்தான் போரை நிறுத்தியது நான் தான் என ட்ரம்ப் மீண்டும் மீண்டும் கூறி வந்தார். இந்நிலையில், 39 நாள்களுக்கு பிறகு ஏன் அதை மறுக்க வேண்டும்?

இந்திய மக்களிடமோ அல்லது நாடாளுமன்றத்திலோ பிரதமர் மோடி ஏன் இதை நேரடியாக தெரிவிக்கவில்லை? பிரதமர் மோடி உடனான தொலைபேசி உரையாடலுக்கு பிறகும் ‘போரை நிறுத்தியது நான்தான்’ என ட்ரம்ப் தெரிவித்துள்ளார். இதோடு போரை நிறுத்த பாகிஸ்தான் தரப்பில் அசிம் முனீர் மற்றும் இந்தியா தரப்பில் மோடி உதவியதாக அவர் கூறி இருந்தார்.

மேலும், பாகிஸ்தானை நேசிப்பதாக ட்ரம்ப் கூறியுள்ளார். பாகிஸ்தான் இராணுவ தளபதி அசிம் முனீரை மதிய விருந்துக்கு அழைத்ததாக வெள்ளை மாளிகை அறிக்கை வெளியிட்டது.” என குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியாவில் ஆங்கிலம் பேசுபவர்கள் விரைவில் வெட்கப்படுவர்; அமித் ஷா



நமது நாட்டில் ஆங்கிலம் பேசுபவர்கள் விரைவில் வெட்கப்படுவார்கள் எனவும் அத்தகைய சமூகத்தை உருவாக்குவது வெகு தொலைவில் இல்லை என்றும் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆசுதோஷ் அக்னிஹோத்ரி எழுதிய புத்தக வெளியீட்டு விழா டில்லியில் நடைபெற்றது. விழாவில் கலந்து கொண்டு பேசிய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா,

“இந்தியாவின் அடையாளத்துக்கு தாய்மொழிகள் முக்கியமானவை. வெளிநாட்டு மொழிகளை விட அவை முன்னுரிமை பெற வேண்டும். இந்த நாட்டில், ஆங்கிலம் பேசுபவர்கள் விரைவில் வெட்கப்படுவார்கள். அத்தகைய சமூகத்தை உருவாக்குவது வெகு தொலைவில் இல்லை.

நமது நாட்டின் மொழிகள் நமது கலாச்சாரத்தின் ஆபரணங்கள் என்று நான் நம்புகிறேன். நமது மொழிகள் இல்லாவிட்டால் நாம் இந்தியர்களாக இருக்க முடியாது. வெளிநாட்டு மொழிகளைக் கொண்டு இந்தியாவை நாம் கற்பனைகூட செய்ய முடியாது. இந்தியாவின் மொழி பாரம்பரியத்தை மீட்டெடுக்க நாடு முழுவதும் புது முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். காலனித்துவ அடிமைத்தனத்தின் அடையாளமாக உள்ள ஆங்கிலம் உலகம் முழுவதும் வெறுக்கப்படும். நமது நாடு, நமது கலாச்சாரம், நமது வரலாறு மற்றும் நமது மதத்தைப் புரிந்துகொள்ள, எந்த அந்நிய மொழியும் போதுமானதாக இருக்காது. அரைகுறையான அந்நிய மொழிகள் மூலம் முழுமையான இந்தியா என்ற கருத்தை கற்பனை செய்து பார்க்க முடியாது.

இந்தப் போர் எவ்வளவு கடினமானது என்பதை நான் முழுமையாக அறிவேன். ஆனால் இந்திய சமூகம் அதில் வெற்றி பெறும் என்றும் நான் முழுமையாக நம்புகிறேன். மீண்டும் ஒருமுறை, சுயமரியாதையுடன், நமது சொந்த மொழிகளில் நமது நாட்டை நடத்துவோம், சித்தாந்தம் செய்வோம், ஆராய்ச்சி செய்வோம், முடிவுகளை எடுப்போம், உலகையும் வழிநடத்துவோம். இதில் யாரும் சந்தேகப்படத் தேவையில்லை. 2047 ஆம் ஆண்டில் உலகின் உச்சியில் இருப்பதற்கு நமது மொழிகள் பெரிதும் பங்களிக்கும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பினார் சோனியா

உடல்நலக்குறைவு காரணமாக கடந்த ஞாயிற்றுக் கிழமை டில்லியில் உள்ள மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்ட சோனியா காந்தி, சிகிச்சை முடிவடைந்ததை அடுத்து நேற்று வீடு திரும்பினார்.

காங்கிரஸ் நாடாளுமன்ற கட்சி தலைவர் சோனியா காந்திக்கு வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதையடுத்து டெல்லியில் உள்ள சர் கங்கா ராம் மருத்துவமனையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டது. இதனையடுத்து கடந்த 17 திகதி கங்காராம் மருத்துவமனையின் தலைவர் மருத்துவர் அஜய் ஸ்வரூப் வெளியிட்டஅறிக்கையில்,



“அவர் உடல்நிலை நன்றாக உள்ளது. சிகிச்சைக்கு நல்ல முறையில் அவரது உடல் ஒத்துழைக்கிறது. வயிற்றுத் தொற்றிலிருந்து அவர் மீண்டு வருகிறார். அவரது உணவுமுறை உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுகிறது. மேலும் அவர் தொடர்ந்து கண்காணிப்பில் இருக்கிறார். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, அவரது “டிஸ்சார்ஜ்” ஆகும் திகதி இன்னும் முடிவு செய்யப்படவில்லை. எங்கள் மருத்துவர்கள் குழுவினர் அவரது உடல்நலம் மற்றும் உணவை உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றனர்.” என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், உடல்நலன் தேறிய சோனியா காந்தி மருத்துவமனையில் இருந்து நேற்று “டிஸ்சார்ஜ்” ஆனார். சோனியா காந்தியின் மகன் ராகுல் காந்தி, மருத்துவமனைக்கு சென்று அவரை அழைத்துச் சென்றார்.



# ஈரானின் புஷேர் அணுமின் நிலையத்தை தாக்கினால் செர்னோபில் போல பேரழிவு; ரஷ்யா எச்சரிக்கை

ஈரானின் புஷேர் அணுமின் நிலையத்தின் மீதான இஸ்ரேலிய தாக்குதல், செர்னோபில் மாதிரியான பேரழிவை ஏற்படுத்தும் என்று ரஷ்யாவின் அணுசக்தி நிறுவனம் எச்சரித்துள்ளது.

புஷேர் அணுமின் நிலையத்தை தாக்கியதாக இஸ்ரேலிய இராணுவ செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறினார். ஆனால், அதன் பின்னர் ஓர் இஸ்ரேலிய இராணுவ அதிகாரி இந்த அறிக்கையை தவறானது என்று மறுத்தார். ஆனாலும், புஷேர் தளம் தாக்கப்பட்டதை உறுதிப்படுத்தவோ அல்லது மறுக்கவோ முடியாது என்று இஸ்ரேல் தரப்பு கூறியது. இந்தப் பின்னணியில்தான், ஈரானின் புஷேர் அணுமின் நிலையத்தின் மீதான இஸ்ரேலிய தாக்குதல், செர்னோபில் மாதிரியான பேரழிவை ஏற்படுத்தும் என்று ரஷ்யாவின் அணுசக்தி நிறுவனம் எச்சரித்துள்ளது.

புஷேர் ஈரானில் இயங்கும் ஒரே அணுமின் நிலையம் ஆகும், இது ரஷ்யாவால் கட்டப்பட்டது. நேற்று அதிகாலையில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில்,

“இஸ்ரேல் ஈரானின் அணுசக்தி திறன்களை வலுக்கட்டாயமாக குறைக்க முயற்சித்தாலும், புஷேர் தளத்தில் அதிக அணுசக்தி வசதிகளை உருவாக்கும் மாஸ்கோவின் தொழிலாளர்கள் பாதுகாப்பாக இருப்பார்கள் என்று ரஷ்யாவுக்கு இஸ்ரேல் உறுதியளித்துள்ளது.” என்றார்

மேலும், ரஷ்ய நிபுணர்கள் பணிபுரியும் ஈரானில் உள்ள புஷேர் அணுமின் நிலையம் மீதான வான்வழித் தாக்குதல்களை உடனடியாக நிறுத்துமாறு இஸ்ரேலை ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் வலியுறுத்தியது.

# ஈரான் உச்ச தலைவர் கமேனி உயிருடன் இருக்கவே கூடாது

## இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் சீற்றம்



ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி உயிருடன் இருக்கவே கூடாது என்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் காட்டமாக தெரிவித்துள்ளார்.

சொரோகா மருத்துவமனை தாக்குதலால் கடும் கோபமடைந்துள்ள இஸ்ரேல் எச்சரிக்கைகளை பதிவு செய்து வருகிறது. ஏற்கெனவே பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, ‘ஈரான் மிகப் பெரிய விலை கொடுக்க வேண்டியிருக்கும்’ என்று கூறியிருந்த நிலையில், இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ்,

“இஸ்ரேல் இராணுவத்துக்கு நாங்கள் இலக்குகளை வகுத்துக் கொடுத்துவிட்டோம். ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி உயிருடன் இருக்கவே கூடாது.” என்று தெரிவித்துள்ளார்.

காட்ஸ் செய்தியாளர்களுக்கு அளித்தப் பேட்டியில்,

“கமேனி ஒரு நவீன கால ஹிட்லர். அவர் எப்போதுமே தனது ஏஜென்ட்டுகள் மூலம் இஸ்ரேலை அழிக்க முயறிசிக்கிறார். எங்களைத் தாக்க நினைக்கும் இந்த நபர் உயிருடன் இருக்கவே கூடாது. இஸ்ரேல் இராணுவத்துக்கு நாங்கள் இலக்குகளை வகுத்துக் கொடுத்துவிட்டோம். இந்த நபரை அழிப்பது என்பது எங்களுடைய இந்தப் போரின் இலக்கு. இஸ்ரேலை அழிப்போம் என்று கமேனி முன்பு பேசியது எல்லாம் இப்போது செயல்வடிவம் பெற்றுவருகிறது.” என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளையில், ஈரானின் அரசு ஊடகமான ஐ.ஆர்.என்.ஏ.வெளியிட்டுள்ள செய்தியில், “இஸ்ரேலில் நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் எங்கள் இலக்கு இஸ்ரேல் இராணுவத் தளம் மற்றும் உளவுப் பிரிவு தளம் மட்டுமே. அவை கவ்-யாம் தொழில்நுட்பப் பூங்காவில் உள்ளன. அந்தப் பூங்காவுக்கு அருகே தான் சொரோகா மருத்துவமனை உள்ளது. நாங்கள் நடத்திய தாக்குதலின் அதிர்வலைகளால் ஏற்பட்ட பாதிப்புதான் மருத்துவமனையில் உணரப்பட்டதே தவிர, எங்களின் இலக்கு மருத்துவமனை அல்ல.” என்று தெரிவித்துள்ளது.



# மன்னார் பள்ளிமுனைக் கிராம மக்களின் காணிகளை அரசு சுவீகரிப்பதற்கு முயற்சி

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. விசனம் தெரிவிப்பு

**(மன்னார் நிருபர்)**

மன்னார் பள்ளிமுனை கிராமத்தில் கடற்கரையோடு காணப்படும் மக்களின் காணிகளை அரசாங்கம் சுவீகரிப்பு செய்யவுள்ளமை குறித்தும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் பாதுகாப்பு அமைச்சு சார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் உரை நிகழ்த்தினார்.

அவர் அங்கு கூறியவை வருமாறு:-

வன்னி தேர்தக் மாவட்டத்தில் உள்ள 3 நிர்வாக மாவட்டங்களில் ஒன்றான மன்னார் மாவட்டத்தின் கீழ் பள்ளிமுனை என்னும் கிராமம் உள்ளது.

இங்கு வாழ்கின்ற மக்கள் கடல் தொழிலையே தமது வாழ்வாதாரமாக கொண்டு கடலினை அண்டி வாழ்ந்து வருபவர்கள்.

இது கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்ற கிராமம். இந்தக் கடலினை அண்டிய தாக 24 குடும்பங்கள் 10 பேர்ச் காணித் துண்டில் அரசாங்கத்தினால் வீடு கட்டி கொடுக்கப்பட்ட வீடுகளில் 1984 ஆம் ஆண்டு தொடக்கம் 1990ம் வரை வாழ்ந்து வருகிறார்கள்.

இது தனி நபருக்கு சொந்தமான காணி. ஆனால் 1984 ஆம் ஆண்டு இக்காணி துண்டுகளை வீடமைப்பு திணைக்களம் வேண்டி வீடுகளை அமைத்து குடியேற்ற திட்டம் ஒன்றை நிறுவி மீளவும் அங்கு குடியேறியவர்களுக்கு விற்று, அதற்குரிய பணத்தையும் பெற்றுக் கொண்டது என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும்.

இது தனி நபருக்கு சொந்தமான காணிகள் மொத்தம் இரண்டு ஏக்கரும் இரண்டு பேர்ச்சும். இதற்குரிய உறுதிப் பத்திரங்களும் இவர்களுடைய கைகளில் இருக்கின்றன.

அண்மைக்கால யுத்தம் காரணமாக இந்த மக்கள் தாங்கள் வாழ் வாங்கு வாழ்ந்து வந்த பூர்வீகக் காணிகளையும், வீடுகளையும் கைவிட்டு இடப்பெயர்வை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டன. அது தவிர்க்க முடியாததொன்றாகி விட்டது.

மக்கள் 1990ல் இடம்பெயர்ந்த பின்பு இது இராணுவம்,பொலிஸ், தற்பொழுது கடற்படையினரின் முகாமாக - இருப்பிடமாக - மாறியிருக்கிறது.

அவர்கள், இந்தப் பொதுமக்களுக்கு சொந்தமான குடியிருப்புக்களை ஆக்கிரமித்து தொடர்ந்து அரசாங்கத்துடன் இணைந்து தங்களது சொத்தாக மாற்றிக் கொள்ள முயற்சிகளை முன்னெடுத்து வருகிறார்கள்.

இந்த நிலையில் காணியுடைய உரிமையாளர்கள் இவற்றை மீட்டெடுப்பதற்காக நீதிமன்றில் வழக்கு கொடுத்திருந்தார்கள். ஆனால் அரசாங்கம் காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் இந்த காணிகளை அரச சொத்தாக மாற்றியமைக்க முயற்சிக்கின்றது. - என மேலும் தெரிவித்தார்.

# தமிழர் பிரதேசங்களில் இதுவரை 25 இல் 17 சபைகளின் அதிகாரம் தமிழரசு வசம்!

**(ந.லோகதயாளன்)**

வடக்கு - கிழக்கில் தமிழர் பிரதேசங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தலைமைக்கான தேர்வு இதுவரை 25 சபைகளில் இடம்பெற்றுள்ளது.

அவற்றில் அதிகபட்சமாக தமிழ் அரசுக் கட்சி யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் மட்டக்களப்பு மாநகர சபை உட்பட 17 சபைகளை கைப்பற்றியுள்ளது.

பருத்தித்துறை, கரவெட்டி, வலி. வடக்கு, புதுக்குடியிருப்பு, கரைச்சி, பூநகரி ஆகியவற்றுடன், வெருகல், ஆரையம்பதி, வவுணதீவு, போரதீவு மற்றும் களுவாஞ்சிக்குடி, வாழைச்சேனை, செங்கலடி, வலி.மேற்கு, வலி. தெற்கு ஆகிய பிரதேச சபைகள் உள்பட 17 சபைகளை தமிழரசு கைப்பற்றியுள்ளது.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்பன வவுனியா மாநகர சபையுடன் சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய 3 நகர சபைகளையும், கோப்பாய் பிரதேச சபை என 5 சபைகளைக் கைப்பற்றியுள்ளது.

தமிழ் மக்கள் கூட்டணி நல்லூர்ப் பிரதேச சபையையும், சுயேச்சைக் குழுக்கள் காரைநகர் உள்பட 3 சபைகளையும் கைப்பற்றியுள்ளன.








# மீன்பிடித் தடை காலம் முடிந்து மீன் பிடிப்பதற்குச் சென்ற ராமேஸ்வரம் மீனவரை இலங்கை கடற்படை விரட்டியடிப்பு

## தமிழக மீனவர்கள் தரப்பில் குற்றச்சாட்டு

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மீன்பிடித் தடைக்காலம் நிறைவடைந்த நிலையில் மீன் பிடிக்கக் கடலுக்குச் சென்ற ராமேஸ்வரம் மீனவர்கள் மீது நடுக்கடலில் இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தி விரட்டி அடித்தனர் எனக் கரை திரும்பிய மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மேலும் மீன்பிடி தடைக்காலம் முடிந்து மீன் பிடிக்க சென்ற மீனவர்களுக்கு எதிர்பார்த்த மீன் பிடி இல்லை எனவும் அவர்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.

தமிழக அரசால் ஆண்டுதோறும் அமுல் படுத்தப்படும் மீன்பிடி தடைக் காலம் கடந்த ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி தொடங்கி ஜூன் மாதம் 14ஆம் தேதி நள்ளிரவுடன் நிறைவடைந்தது.

மீன்பிடி தடைக்காலம் நிறைவடைந்த நிலையில் ராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்ல கடந்த திங்கட்கிழமை தயாரான நிலையில் வங்க கடலில் வீசிய சூறைக் காற்று காரணமாக மீன்பிடி அரசால் மீனவர்களுக்கு வழங்கப்படும் மீன்பிடி அனுமதிச்சீட்டு ரத்து செய்யப்பட்டது.

இதையடுத்து மீன்பிடி தடைக்காலம் முடிந்து 64 நாட்கள் பின் நேற்று முன் தினம் மீன் பிடித்து துறைமுகத்திலிருந்து 400க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றனர்.

மீனவர்கள் கச்சத் தீவுக்கும் தனுஷ்கோடிக்கும் இடையே மீன்பிடித்துகொண்டிருந்த போது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக மீனவர்களை விரட்டி அடித்தனர் எனவும், ஒரு சில படகில் இருந்த மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தினர் எனவும் சொல்லப்படுகிறது. இதனால் பெருத்த நஷ்டத்துடன் தாங்கள் கரை திரும்பினர் எனத் தமிழக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் தடை காலம் முடிந்து மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு இறால், நண்டு, கணவாய் உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மீன்கள் அதிகளவு கிடைக்கும்.

ஆனால் மீன்பிடி தடைக் காலத்தின் போது இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகு மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டதால் தடை காலம் முடிந்து மீன் பிடிக்க சென்ற விசைப்படகு மீனவர்கள் எதிர்பார்த்த மீன்பாடு இல்லை, இதனால் படகு ஒன்றுக்கு சுமார் 50 ஆயிரம் முதல் 70 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக வேதனை தெரிவித்துள்ளனர்.

இதே வேளை மீன்பிடி தடைக்காலம் நிறைவடைந்த நிலையில், இலங்கை கடல் எல்லைக்குள் சட்ட விரோதமாக நுழைந்து மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் படும் என இலங்கைக் கடற்றொழில் அமைச்சர் தெரிவித்தமையோடு, கடற்படையினரின் உதவியுடன் இந்திய மீனவர்களின் வருகையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போது அவர் தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.






# இன்றைய ராசி பலன்கள் -20.06.2025



## மேஷம்

இன்று தவறுகள் நேராத வண்ணம் உங்களை நீங்கள் கண்காணித்துக் கொள்ள வேண்டும். உங்கள் பணிகளை முன்னுரிமைப் படுத்தி முறையாக கவனமாகக் கையாள வேண்டும்.

நீங்கள் இன்று பொறுமையுடனும் உறுதியுடனும் பணிகளை முடிக்க வேண்டும். தவறுகள் ஏற்படா வண்ணம் தவிர்க்க கவனமாக இருக்க வேண்டும்.

நீங்கள் இருவரும் ஒருவருடன் ஒருவர் கலந்து பேச வேண்டும். இதன் மூலம் புறக்கணிப்பு உணர்வு தவிர்க்கப் படும். அது உங்கள் உறவை பாதிக்காமல் பார்த்துக் கொள்ள முடியும்.

உங்கள் செலவுகளை திட்டமிட்டு சிறப்பாக செலவு செய்ய வேண்டும். இதன் மூலம் இன்றைய தினம் சிறப்பாக இருக்கும்.

தியானம் மற்றும் பிரார்த்தனை மூலம் உங்கள் ஆரோக்கியத்தைச் சிறப்பாக வைத்துக்கொள்ள முடியும்.



## ரிஷபம்

புதிய நபர்களின் நட்பு இன்று உங்களுக்கு கிடைக்கும். இது பின்னர் உங்களுக்கு பயனளிக்கும். உங்கள் பணிகளை நம்பிக்கையுடன் செய்து முடிப்பீர்கள்.

உங்கள் பணிக்கு உரிய பாராட்டு கிடைக்கும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை குறித்த நேரத்துக்கு முன்பே முடிப்பீர்கள்.

நீங்கள் இருவரும் அன்பான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவு சிறக்கும்.

பணம் அதிக அளவில் காணப்படும். பணம் செலவு செய்து அதன் விளைவில் திருப்தி அடைவீர்கள்.

பக்திப் பாடல்கள் கேட்பது பயனளிக்கும். அதன் மூலம் தேக ஆரோக்கியம் மற்றும் மன ஆரோக்கியம் பராமரிக்கலாம்.



## மிதுனம்

இன்று உங்கள் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி காண்பீர்கள். வாழ்வின் உயரத்தை எட்டுவீர்கள். உங்கள் ஆற்றல் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் விரும்பியதை அடைவீர்கள்.

நீங்கள் உங்களுக்கு கொடுத்த பணிகளை விரைவாக முடிப்பீர்கள். பணிகளை நல்ல தரத்துடன் அளிப்பீர்கள். உங்கள் திறமையின் மூலம் எளிதாக பணியாற்றுவீர்கள்.

நீங்கள் இருவரும் உறவுப் பிணைப்பை வலுப்படுத்துவீர்கள். உங்கள் இருவரிடையே நல்லுறவு காணப்படும்.

இன்று உங்களிடம் போதிய அளவு பணம் காணப்படும் உங்கள் சேமிப்பை உயர்த்துவீர்கள்.

உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும். இதன் மூலம் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



## கடகம்

நீங்கள் இன்று பொறுமையுடன் அமைதியை கடைபிடிக்க வேண்டும். திட்டமிட்டு திறமையுடன் செயலாற்ற வேண்டியது அவசியம். புனித யாத்திரை மேற்கொள்வீர்கள்.

பணியிடத்தில் பணிச்சுமை அதிகமாக காணப்படும். பொறுமையுடன் பணிகளை மேற்கொள்ள வேண்டும். தொழில் சார்ந்த அணுகுமுறை தேவை.

உங்கள் துணையின் உணர்வை புரிந்து கொள்ளுங்கள். அவர்ஃஅவள் தனிமையை உணராத வண்ணம் பார்த்துக் கொள்ளுங்கள். இருவரிடையே மகிழ்ச்சி நிலவ இது மிகவும் அவசியம்.

இன்று கவனமாக இல்லாவிட்டால் பணப்பற்றாக்குறை ஏற்படும். நீங்கள் சரியாக கையாண்டால் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ளலாம்.

இன்று அமைதியுடன் இருந்தால் அனைத்தும் சிறப்பாக இருக்கும். பதட்டப்பட்டு இன்றைய நாளின் மகிழ்ச்சியை கெடுத்துக் கொள்ளாதீர்கள். பல் வலி அல்லது தலை வலி ஏற்பட வாய்ப்புள்ளது உங்கள் உணவில் கவனம் செலுத்த வேண்டும்.



## சிம்மம்

உங்கள் பொறுமை காரணமாக வெற்றி அடைவீர்கள். பொறுமை மற்றும் புத்திசாலித்தனம் பொறுத்து உங்கள் வளர்ச்சி அமையும். உங்கள் செயல்களில் கவனம் தேவை.

உறுதியும் தைரியமும் இருந்தால் இன்று வெற்றி பெறலாம். சாதாரண பணிகளை விட இன்று பணிகள் கூடுதலாக இருக்கும்.

உங்கள் துணையுடன் உறவு நல்லுறவாக அமைய அவருடைய கருத்துக்கும் மதிப்பு அளியுங்கள். அவருடன் நட்புணர்வு கொள்ளுங்கள்.

இன்று உங்கள் அதிர்ஷ்டத்தை விட திறமையில் நம்பிக்கை வேண்டும். பணபுழக்கம் சிறப்பாக இருக்காது. என்றாலும் அதனைப் பெரிதாகக் கொள்ள வேண்டாம். நிதிநிலையை மேம்படுத்த முயலுங்கள்.

தோல் அரிப்புகளை தடுக்க எண்ணெய் உணவுகளை தவிர்க்கவும். அதிகமாக வெயிலில் சுற்றாதீர்கள்.



## கன்னி

நீங்கள் விரும்பியது இன்று நிறைவேறும். உங்கள் பிரார்த்தனைகள் நிறைவேறும் நீங்கள் இன்று மகிழ்ச்சியாக உற்சாகமாக இருப்பீர்கள்.

நீங்கள் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை விட அதிகப் பணிகளை கையாள்வீர்கள். உங்கள் மேலதிகாரிகள் உங்களின் நேர்மையைக் கண்டு உங்களைப் பாராட்டுவார்கள்.

நீங்களும் உங்கள் துணையும் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். இருவரும் இணைந்து திரைப்படம் போன்ற பொழுதுபோக்கு நிகழ்சிகளை கண்டு களிப்பீர்கள்.

உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். உங்கள் திறமை காரணமாக உங்கள் சேமிப்பு பல மடங்கு உயரும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சீரும் சிறப்புமாக இருக்கும்.



## துலாம்

இன்று செயல்களை திட்டமிட்டால் சிறப்பாக ஆற்றலாம். உங்கள் மனதில் மகிழ்ச்சி குறைந்தது போல உணர்வீர்கள். அமைதியாக இருந்தால் மகிழ்ச்சியாக இருக்கலாம். சில கூடுதல் பொறுப்புகளை சுமக்க நேரும்.

இன்று கவனச் சிதைவு ஏற்படாத வகையில் பணிகளை ஆற்ற வேண்டும். உங்கள் பணிகளை அமைதியாக விடாமுயற்சியுடன் மேற்கொள்ளுங்கள்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே கருத்து வேறுபாடு காணப்படும். பேசி தீர்ப்பதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும். இதனால் பிரச்சினைகள் தீரும்.

நிதிநிலைமை சுமாராக இருக்கும். சேமிப்பு மற்றும் சிக்கனமான செலவை மேற்கொள்ள வேண்டும். இருப்பதைக் கொண்டு வாழ்தல் அவசியம்.

இன்று கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. கண்களில் கவனம் செலுத்துவது அவசியம்.



## விருச்சிகம்

இன்று நீங்கள் உற்சாகமாக ஆற்றலுடன் செயல் பட வேண்டும். பொறுமையாக செயல்களைக் கையாள வேண்டும். உங்கள் கூடப் பிறந்தவர்களுடன் சிறு பிரச்சினைகள் ஏற்படலாம்.

பணி சம்பந்தமாக இன்று பயணம் மேற்கொள்ள நேரும். பணியிடத்தில் சவால்கள் நிறைந்து காணப்படும் என்பதால் புத்திசாலித்தனமாகப் பணிகளைக் கையாள வேண்டும்.

இன்று உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். அமைதியாக இனிமையாக உங்கள் கருத்துகளை வெளிப்படுத்த வேண்டும்.

இன்று செலவுகள் சிறது அதிகமாக காணப்படும் என்பதால் பணத்தை கவனமாக நிர்ணயிக்க வேண்டும். சிறப்பாக திட்டமிட வேண்டும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை கண்களை பரிசோதித்துக் கொள்ளவது சிறந்தது.

# இன்றைய ராசி பலன்கள் -20.06.2025




இன்று உங்களிடம் எதிர்மறை எண்ணங்கள் நிறைந்து காணப்படும். இதனை தவிர்த்தல் நல்ல மன நிலையுடன் காணப்படலாம். உற்சாகமுடன் இருந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

இன்று சற்று மந்தமாகச் செயல்படுவீர்கள். அதனால் பணிகளை முடிக்க தாமதமாகும் கவனமாகப் பணியாற்றினால் முன்னேற்றம் கிடைக்கும்.

சிறந்த தகவல் பரிமாற்றம் மூலம் சிறந்த பிணைப்பு உருவாகும். இதனைப் பின்பற்றுவதன் மூலம் உறவில் அன்பை வளர்க்க முடியும்.

பண வரவு சுமாராக இருக்கும். பணத்தை எவ்வாறு கையாள்வது என்று புரிந்து கொண்டு சாதுர்யமாக செலவு செய்ய வேண்டும்.

அற்ப விஷயங்களுக்காக சிறிது குழப்பமடைவீர்கல். இது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்காத வண்ணம் கவனித்துக் கொள்ளுங்கள். மனதில் நம்பிக்கையுடன் இருங்கள்.




உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். நீண்ட கால திட்டம் சிறந்தது. முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கும். சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படும். பணியிடத்தில் நல்ல வாய்ப்புகள் கிடைக்கும் உங்கள் படைப்பாற்றல் அதிகரிக்கும்.

இன்று நீங்கள் அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணைக்கு மகிழ்ச்சி கிடைக்கும். உங்கள் இருவரிடையே அன்பு அதிகரிக்கும்.

உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் கையில் உள்ள பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். உங்கள் தன்னம்பிக்கை காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று மிகச் சிறப்பான நாள். உங்கள் அனைத்து முயற்சிகளும் இன்று வெற்றி அடையும். உங்கள எண்ணங்களில் அமைதி வேண்டும்.

உங்கள் பணிகளை அனைவரும் பாராட்டுவார்கள். உங்கள் சக பணியாளர்களுக்கு நீங்கள் எடுத்துக்காட்டாக இருப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை வளர்க்க முடியும். இதனால் உறவை வலுப்படுத்த முடியும்.

பணபுழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பும் கணிசமாக உயரும்.

இன்று சிறப்பான ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




தற்போதைய நிலையிலிருந்து நீங்கள் முன்னேற நீங்கள் அதிகமாக முயல வேண்டும். இதன் மூலம் பாதுகாப்பின்மை உணர்வு அகலும். உற்சாகமாக இருக்க முயலுங்கள்.

நீங்கள் பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். பணிகளை ஒப்படைக்கும் முன் தவறுகள் உள்ளதா என்று சரி பார்க்க வேண்டும்.

உங்கள் பிரியமானவரிடத்தில் அன்பாக இருக்க வேண்டும். இதனால் நல்லுறவை வளர்க்க இயலும்.

சில கடன்களை அடைக்க வேண்டியிருக்கும். அதனை உடனே செய்வதன் மூலம் பண இழப்பை தடுக்க முடியும். பணத்தைச் சிறப்பாக நிர்வகிக்க வேண்டியது அவசியம்.

இன்று தொண்டை வலிக்கான வாய்ப்பு உள்ளதால் குளிர்ந்த நீரைப் பருகுவதை தவிர்க்கவும். தலைவலியை தவிர்க்க அமைதியாக இருக்கவும். உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.



# ஜூன் 30 முதல் ஜூலை 5 வரை டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் ஜூலை 5 ஆம் திகதி வரை விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

நிலவும் மழையுடனான வானிலையால் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவின் சமூக வைத்திய நிபுணர் பிரஷீலா சமரவீர தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி, மாத்தளை, குருணாகல், மொனராகலை, கேகாலை, கண்டி, பதுளை, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 26,986 பேர் டெங்கு காய்ச்சலுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 14 பேர் உயிரிழந்துள்ளனர்.